1972 டிசம்பர் 12] [திரு. என். கணபதி]

கொள்ள வேண்டும் என்பது ஒரு மரபு. இங்கே இருக்கிற உறுப்பினர்களுடைய உரிமையைக் காப்பாற்றக்கூடிய சபையின் கண்ணியத்தையே குலைக்கக்கூடிய வகையில் தொடர்ந்து பேரவைத் தலைவரையும், பேரவையையும் அவமதிக்கக்கூடிய வகையில் டாக்டர் ஹாண்டே அவர்கள் நடந்து கொள்வது மிகமிக வருந்தத்தக்க முறையாகும். எனவே, இப்படி அவை நிகழ்ச்சிகளுக்குத் தொடர்ந்து இடையூறு விளைவித்து வருகிற டாக்டர் ஹாண்டே அவர்களை இன்றைக்கு ஒரு நாள் தாங்கள் சஸ்பெண்டு செய்ய வேண்டுமென்ற என் கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கணபதி அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் அவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட பிரச்சினை பற்றி நான் ஏற்கனவே என் தீர்ப்பை வழங்கி விட்டேன். அந்தப் பிரச்சினை இதோடு முடிகிறது.

(4) அறிவிப்பு.

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரித் (திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரித் (திருத்தச்) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரித் (திருத்தச்) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரித் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.